This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# Three Thousand Prabandham Verses out of the Four Thousand Prabandham Verses
## நாலாயிரத்தில் மூன்றாயிரங்கள்

**முனைவர் செ.கற்பகம்**
*துறைத்தலைவர் இசைத்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*
*Correspondence: tharangadissanayake86@gmail.com*
*Submitted: November, 08, 2023; Revised: December, 15, 2023; Accepted: December, 19, 2023*

**Abstract**

Vaishnava Nalayira Divya Prabhandha's songs are among the hymns spoken in Tamil. These are learned with Pann and Rhythm. Today the singing tradition has transformed to chanting tradition. This article explains with source material that musicians need to re-understand these changes caused by the passage of time. In this collection out of four thousand, the third thousand is only Iyalpa, the other three thousands are Isaipa. In the First Thousand there are many isaipa sung by many Alwars. In the Second thousand which consist of the Isaipa sung by only Thirimangai Alwar. The third one consist only Iyalpa sung by many Alwars. The Fourth Thousand consist of the Isaipa sung by only Nammalvar. We will recreate these songs that give priority to the music by Pann and rhythm.

**ஆய்வுச்சுருக்கம்**

வைஷ்ணவ நாலாயிர திவ்விய பிரபந்தம் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூலின் வாயிலாக பண்டைய பண் மற்றும் தாள முறையினை அறியமுடிகின்றது. தற்பொழுது பாடும் மரபு மறைந்து ஓதும் மரபாக உள்ளது. பண்டைய காலத்தில் காணப்பட்ட இசைமுறைகளை இசையறிஞர்கள் அறிந்து கொள்ள இக்கட்டுரை துணைநிற்கும். நான்காயிரத்தில் மூன்றாயிரம் தவிர மற்றவை இசைப்பா வகையாகும். முதலாயிரத்தில் பல ஆழ்வார்கள் பாடிய இசைப்பாக்கள் உள்ளன. இரண்டாவதாயிரம் திருமங்கையாழ்வார் மட்டும் பாடிய இசைப்பாக்கள் உள்ளன. மூன்றாவதாயிரம் பலர் பாடிய இயற்பா தொகுதியாகும். நான்காவதாயிரம் நம்மாழ்வார் மட்டும் பாடிய இசைப்பாவாகும். இதன் இசைச்சிறப்பை அறிந்து இதன் பண் தாள மரபுகளை மீட்டுருவாக்குவோம்.

**Key Words:** Pann பண், Ragam இராகம், Talam தாளம், Aga Marabhu Song அகமரபுப்பாடல்கள், Oththu ஒத்து

**முன்னுரை**

தெய்வத்தமிழ் பேசும் இசைத்தமிழ்ப் பாக்கள் தொன்மை உடையது. தொடர்ச்சி உடையது இன்றும் வாழ்ந்து வருகிறது. இவை பாட்டு என்றும், பாசுரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றுள் வைணவம் தந்த பாசுரத் தொகுப்புகளை நாலாயிரம் என்றும், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்றும் அழைப்பர். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய இப்பாசுரத் தொகுப்புகளை வேத வியாசர் வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தது போல் (தெய்வத்தமிழ், கருத்தரங்கக் கட்டுரைத்தொகுப்பு, ப.396) வைணவப் பாசுரங்களைத் தொகுத்த நாதமுனிகள் நான்கு தொகுதிகளாக வகுத்துத் தந்துள்ளார். இவ்வாறு வகுக்கும் பொழுது இசைப்பா, இயல்பா என்ற வகையில் வகுத்துத் தந்துள்ளார். இவற்றுள் இசைப்பாக்களை மூன்று தொகுதிகளாகவும், இயல்பாடல்களை ஒரு தொகுதியாகவும் அமைத்துத் தந்துள்ளார்.

நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் முதலாயிரம், இரண்டாயிரம், நான்காமாயிரம் ஆகியன மூன்று தொகுப்புப் பாசுரங்கள் இசைப்பா பகுதிகளாகும். மூன்றாம் ஆயிரப் பாசுரங்கள் இயல்பா பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

**முதலாயிரம்**

முதலாயிரத்தில் ஒன்பது பிரபந்தங்கள் உள்ளன. இவை இசைப்பாக்களாகும்.

| வ. எண் | பிரபந்தம் | ஆசிரியர் பெயர் | பாசுரத்தொகை |
|---|---|---|---|
| 1. | பெரியாழ்வார் திருமொழி | பெரியாழ்வார் | 473 |
| 2. | திருப்பாவை | ஆண்டாள் | 30 |
| 3. | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் | 143 |
| 4. | பெருமாள் திருமொழி | குலசேகர ஆழ்வார் | 105 |
| 5. | திருச்சந்தவிருத்தம் | திருமழிசையாழ்வார் | 120 |
| 6. | திருமாலை | தொண்டரடிப் பொடியாழ்வார் | 45 |
| 7. | திருப்பள்ளிஎழுச்சி | தொண்டரடிப் பொடியாழ்வார் | 10 |
| 8. | அமலானாதிபிரான் | திருப்பாணாழ்வார் | 10 |
| 9. | கண்ணிநுண் சிறுத்தாம்பு | மதுரகவியாழ்வார் | 11 |
| | | **கூடுதல்** | **947** |

(கோவேந்தன்.த, 2014, ப. 46)

இவை அனைத்தும் முதல் ஆயிரமாகக் கணக்கிடப்பட்டுள்ளன. ஆழ்வார்கள் பலர் பாடிய இசைப்பாக்கள் திருமுறைகளைப் போல முதன்மை இடம் பெற்றுள்ளன. பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டொடு முதலாயிரம் தொடங்குகிறது. இதில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. நாட்டை இராகத்தில் அடதாளத்தில் பாடப்பட்டுள்ளதனைத் திவ்வியபிரபந்த பண்டைய பதிப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் இன்று இப்பாசுரங்கள் பாடப் பெறாமல் ஓதப்பட்டு வருகின்றன.

**இராகம் - நாட்டை**

**தாளம் - அட**

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**

**பலகோடி நூறாயிரம்**

**மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்**

**சேவ்வடி செவ்வி திருக்காப்பு (திருப்பல்லாண்டு)**

பெரியாழ்வார் பாடிய பாசுரங்கள் 473. இவை அனைத்தும் இசைப் பாக்களாகும். தன்யாசி, நீலாம்பரி, மோகனம், முகாரி, யமுனா கல்யாணி, அடாணா, உசேனி, பந்துவராளி, புன்னாகவராளி, அசாவேரி, பிலஹரி, மத்திமாவதி, கேதாரகௌளை, ஆரபி, சுருட்டி, சாவேரி, செஞ்சுருட்டி, தோடி, சங்கராபரணம், சகானா போன்ற இராகங்களிலும், அட, ஆதி, ஜம்பை, திரிபுடை, ரூபக தாளங்களிலும் பாடப்பட்டு வந்துள்ளன. இவை போல் ஆண்டாள் பாடிய திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழியும் பாடப்பட்டு வந்துள்ளமையைப் பண்டைய பதிப்பு தெளிவுபடுத்தியுள்ளது. இவை போல் ஏனைய ஆழ்வார்கள் பாடிய இசைப்பா தொகுப்புகளும் முதலாயிரத்தில் இடம் பெற்றுள்ளன. முதலாயிரத்தின் இறுதியில் மதுரகவியாழ்வார் பாடிய கண்ணி நுண் சிறுதாம்பு என்று தொடங்கும் பதினொரு பாசுரங்கள் இடம்பெற்றுள்ளன.

**அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம்**
**அன்பன் தன்னை தென்குருகூர் நகர் நம்பிக்கு**
**அன்பனாய் மதுர கவிசொன்ன சொல்**
**நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே (I:947)**

**இரண்டாவது ஆயிரம்**

இரண்டாவது ஆயிரம் திருமங்கைஆழ்வார் பாடிய இசைப்பா தொகுப்புகளாகும். இப்பகுதியில் திருமங்கை ஆழ்வார் பாடிய ஆறு பிரபந்தங்கள் உள்ளன. இவற்றுள் மூன்று இசைப்பா தொகுதிகளாகவும், மூன்று இயல்பா தொகுதிகளாகவும் அமைந்துள்ளன. இசைப்பா தொகுதிகள் இரண்டாயிரத்திலும், இயல்பா தொகுதிகள் மூன்றாவது ஆயிரத்திலும் இடம்பெற்றுள்ளன. பெரிய திருமொழி(பிரபந்த எண்.10) -1084 பாசுரம், திருக்குறுந்தாண்டகம் -20 பாக்களும், திருநெடுந்தாண்டகம்-30. இவையும் இராக அடிப்படையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் பெருந்துயரிடும் பையில் பிறந்து**

**கூடினேன் கூடி இளையவர் தம்மோடு அவர் தரும் கலவியே கருதி**

**ஓடினேன் ஓடி உய்வ தோர் பொருளால் உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து**

**நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்**

**(II-948)**

மேலும், இவர் பாடிய 1034 பாசுரங்கள் இசைப்பாக்களாக உள்ளன. இவை பல்வேறு தலங்கள் மீது பாடப்பட்டுள்ளன. பல்வகை யாப்புகளில் அமைந்துள்ளன. இவற்றுள் திருமங்கையாழ்வார் தானாக நின்று பாடிய பாசுரங்களும், பெண்ணாக நின்று பாடிய பாசுரங்களும் உள்ளன. அகமார்க்கம் தழுவிய மதுரபக்திப் பாடல்களாகவும் அமைந்துள்ளன.

**மன்னுமா மழைதவழும் மேக வண்ணா!**

**விண்ணவர் தம் பெருமானே! அருளாயென்று**

**அன்னமாய் முனிவரோ டமர ரேத்த**

**அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை**

**மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்**

**மானவேற் பரகலான் கலியன் சொன்ன**

**பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்**

**பழவினையை முதலரிய வல்லார் தாமே (II:2081)**

திருநெடுந்தாண்டகத்தில் உள்ள 30 பாசுரங்களில் ஆழ்வார் முதல் பத்துப் பாசுரங்களில் தாமாக நிலையில் அருளிச் செய்தவை. இவை கல்யாணி, தோடி, சங்கராபரணம் இராகங்கள் அட, ரூபக தாளங்களில் அமைந்துள்ளன. அடுத்து வரும் பத்துப் பாசுரங்கள் தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமைக் கண்டு இரங்கிக் கூறும் நிலையில் அமைந்துள்ளன. (கமலக்கண்ணண் இரா.வ, 2000, ப 197 ).

இவை பந்துவராளி, சாவேரி, எதுகுலகாம்போதி, அடாணா இராகங்களிலும். ரூபகம், ஜம்பை, திரிபுடை, ஆதி தாளங்களில் அமைந்துள்ளன. அடுத்து வரும் ஐந்து பாசுரங்கள் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல் துறையைச் சார்ந்தவை. அடாணா, ஆனந்த பைரவி, காம்போதி, வராளி இராகங்களில் அமைந்துள்ளன. அடுத்து வரும் பாடல் எண் 26 வண்டு விடு தூது துறையில் கேதாரகௌளை இராகத்தில் ரூபகதாளத்தில் அமைந்துள்ளது.

அடுத்த பாடல் நாரை விடு தூதில் சாரங்கா இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது. அடுத்து வரும் பாடல்கள் தலைவி தலைவனைக் காணாது ஊடல் கொண்டு தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. இது மோகன இராகம் அட தாளத்தில் அமைந்துள்ளது. அடுத்து வரும் இரண்டு பாசுரங்கள் ஆழ்வார் தாமாக நின்று பாடியவை. இவை மோகன இராகத்தில் ஜம்பை தாளத்தில் அமைந்துள்ளன.

நாலாயிரத்தில் பண்டைய பதிப்பில் இராக தாள அமைப்பு இடம்பெற்றிருந்தது. இவற்றைச் சென்னை திருவல்லிக்கேணியைச் சார்ந்த மாயன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இப்பாசுரங்கள் இன்றைய இராகங்களொடு பாடப்பட்டு வந்தமையை இக்குறிப்புகள் வாயிலாக அறிகிறோம். ஆனால் இன்று இப்பாசுரங்கள் பாடப்பெறாமல் ஓதப்பட்டு வருகின்றன.

**மூன்றாவது ஆயிரம்**

மூன்றாவது ஆயிரம் பலர் பாடிய இயற்பா தொகுப்புகளாகும். இவற்றுள் பலர் பாடிய பத்துப் பிரபந்தங்களும் 593 பாசுரங்களும் உள்ளன. முதல் ஆழ்வார் மூவர்கள் பாடிய திருவந்தாதிகள், திருமழிசையாழ்வார் பாடிய திருவந்தாதி, நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம், திருஆசிரியம், பெரிய திருவந்தாதி, திருமங்கை யாழ்வாரின் திருவெழுக்கூற்றிருக்கை, பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகியன இயற்பா பகுதிகளாக உள்ளன.

| வ.எண் | பிரபந்தம் | ஆசிரியர் பெயர் | பாசுரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் | 100 |
| 2. | இரண்டாம் திருவந்தாதி | பூதத்தாழ்வார் | 100 |
| 3. | மூன்றாம் திருவந்தாதி | பேயாழ்வார் | 100 |
| 4. | நான்முகன் திருவந்தாதி | திருமழிசையாழ்வார் | 96 |
| 5. | திருவிருத்தம் | நம்மாழ்வார் | 100 |
| 6. | திருவாசிரியம் | நம்மாழ்வார் | 7 |
| 7. | பெரிய திருவந்தாதி | நம்மாழ்வார் | 87 |
| 8. | திருவெழுக்கூற்றிருக்கை | திருமங்கையாழ்வார் | 1 |
| 9. | சிறிய திருமடல் | திருமங்கையாழ்வார் | 1 |
| 10. | பெரிய திருமடல் | திருமங்கையாழ்வார் | 1 |
| | | கூடுதல் | 503 |

(சஞ்சீவி.ந, 1975, ப 146)

பலர் பாடி இசைப்பாக்கள் முதலாயிரத்தில் இடம்பெற்றுள்ளது போல பலர் பாடிய இயற்பாக்கள் மூன்றாவதாயிரத்தில் இடம்பெற்றுள்ளது.

**நான்காம் ஆயிரம்**

நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழிப் பிரபந்தத்தில் உள்ள 1102 பாசுரங்கள் நான்காம் ஆயிரமாகவும் இசைப்பாக்கள் அடிப்படையிலும் அமைந்துள்ளன. இவை பண், இராகம், ஒத்து என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

நம்மாழ்வார் பாடிய திருவிருத்தம், அகமரபு தழுவிய பாடல்களாக அமைந்துள்ளன. தாமான நிலையில் பாடியவை. பெண்ணாக நின்று பாடியவை என்ற நிலையில் இவற்றைக் காணலாம். தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்துரைத்தல், பிரிவாற்றாத தலைவி, நெஞ்சழிந்து உரைத்தல், தலைவன் பொருள் வயிற் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக்கு உரைத்தல், தலைவன் தலைவியை நீங்கல் அருமை என்று கூறல், நலம் பாராட்டல், வெறிவிலக்கு போன்ற அகப்பொருள் துறைச் சார்ந்த 100 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் பெரிய திருவந்தாதியில் எம்பெருமானின் பெருமைகள் கூறப்படுகின்றன. (கமலக்கண்ணண் இரா.வ, 2000, ப 113).

நான்காவது ஆயிரத்தில் நட்டபாடை, முதிர்ந்த குறிஞ்சி, செருந்தி, வியந்தம், இந்தளம், கொல்லி, தக்கராகம், புறநீர்மை, நாட்டம், சீகாமரம், பழம்தக்கராகம், தக்கேசி போன்ற பண்கள் அடிப்படையில் பாடப்பட்ட திருவாய்மொழி பாசுரங்கள் உள்ளன. திருமுறைகளில் காணப்படாத சில பண் பெயர்களும் திருவாய்மொழியில் கிடைத்துள்ளன. பண்களொடு அவற்றிற்குரிய இராகப் பெயர்களும் குறிப்பிடப் படுகின்றன. . (கமலக்கண்ணண் இரா.வ, 2000, ப 156 ).

**முதிர்ந்த குறிஞ்சி – கமாஸ், செஞ்சுருட்டி, நாதநாமக்ரியா**
**நட்டபாடை - அபருபராகம், கண்டாராகம்**
**செருந்தி - கல்யாணி**
**வியந்தம் - மத்தியமாவதி**
**இந்தளம் - தேசியராகம்**
**கொல்லி - மோகனராகம்**
**தக்கராகம் - பைரவி ராகம்**
**புறநீர்மை - எதுகுல காம்போதி**
**நாட்டம் - முகாரி ராகம்**

இவை போன்ற பண்களும் இராகங்களும் குறிப்பிடப்படுகின்றன. சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் பண்ணாய்வு மாநாட்டில் இவை குறித்த விவாதங்களும் நடைபெற்று வருகின்றன. மேலும், தாளங்கள் ஒத்து என்ற பெயரில் இன்றைய தாளப் பெயரிலும் அழைக்கப்படுகின்றன.

**ஏழொத்து - ஆதிதாளம், அடதாளம், ரூபகதாளம், திரிபுடைதாளம்**
**இடையொத்து - ஆதிதாளம், ரூபகதாளம்**
**நடையொத்து - ஆதிதாளம்**
**ஒன்பதொத்து - ஆதிதாளம், அடதாளம், ரூபகதாளம்**

இவ்வாறு ஒத்து அடிப்படையிலும், தாளங்கள் அடிப்படையிலும் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவை பற்றிய ஆராய்ச்சிகளையும் சென்னை தமிழிசைச் சங்க மாநாடு விவாதித்து வருகிறது.

திருவாய்மொழியிலும், அகமார்க்கப்பாடல்கள் உள்ளன. 27 பதிகங்கள் இம்முறையில் உள்ளன. தாய்க்கூற்று, தோழிக்கூற்று, தலைவிக் கூற்று பாசுரங்களாக அமைந்துள்ளன. பண்ணாங்க பாசுரங்களாகவும் இவை அமைந்துள்ளன. இவ்வகையில் அகத்துறைப் பாடல்கள் மட்டும் 1193 பாசுரங்கள் நாலாயிரத்தில் இடம்பெற்றிருப்பதை (சண்முக செல்வகணபதி , 2015 , ப.204)

**நான்காம் திருவாய்மொழி**

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

பிரிவாற்றாத நிலையில் தோழிகண்டு வருந்தும் தலைவியின் நிலையைத் தாய் உரைத்தல் நிலையில் பாசுரங்கள் உள்ளன.

**பண் : பஞ்சமம்**

**தாளம்: இடையொத்து பிலஹரிராகம். அடதாளம்**

**"மண்ணையிருந்துழாவி வாமனன் மண்ணிதுவென்னும்**
**விண்ணைத்தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கைகாட்டும்**
**கண்ணை யுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்றும் அன்னே! என**
**பெண்ணைப் பெருமயல் செய்தாங்கு என் செய்கேன்? பெய்வளையீரோ!**

**முடிவுரை**

வைணவ சமயத்தமிழ்ப் பாசுரங்களாக விளங்கும் நாலாயிரத்தில் மூன்றாயிரங்கள் பண் சுமந்த இசைத்தமிழ்ப் பாக்களாகும். பண்ணொடும் இராகத்தொடும் தாளத்தொடும் இறை முன்பு பாடப்பட்டவை இன்று இம்மரபு மங்கினாலும் ஒரு சிலர் பண்ணமைதியொடு பாடிவந்துள்ளனர். பாடியும் வருகின்றனர். காஞ்சிபுரம் வேங்கடவரதன் என்ற பெரியவர் பண்ணமைதியோடு பாடினார். நாட்டிய அரங்குகளில் இராகத்தொடும், தாளத்தொடும், நாட்டிய ஜதிகளொடும் சுவையும் அபியமும் இணைந்த நிலையில் இன்றும் ஆடப்பட்டு வருகின்றன. ஆழ்வார்கள் தந்த இத்தெய்வத் தமிழ்ப் பாசுரங்களைப் பண்ணமைதியோடு பயிலும் நிலையைக் கண்டுணர்வோம். இசைத்தமிழ் வளங்களை நன்குணர்வோம்.

**துணைநின்ற நூல்கள்**

1. கோவேந்தன் த.(2014).ஆழ்வார்கள் அருளிச் செய்த, நாலாயிர திவ்யப் பிரபந்தம் மாயன் பதிப்பகம், சென்னை.
2. சஞ்சீவி.ந,(1975). தெய்வத்தமிழ், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு,
3. கமலக்கண்ணன்.வ,(2000). நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும், தொகுதி-3, வர்த்தமானன் வெளியீடு, சென்னை.
4. கமலக்கண்ணன்,வ,(2000). நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும், தொகுதி-IV, வர்த்தமானன் வெளியீடு, சென்னை.
5. கமலக்கண்ணன்.வ.(2000) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும், தொகுதி-V, வர்த்தமானன் வெளியீடு, சென்னை
6. சண்முக செல்வகணபதி,(2015) இந்தியப் பண்பாட்டு மேம்பாட்டில் தமிழ்நாட்டிய இலக்கியங்களின் பங்களிப்பு, பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு பெரு ஆய்வுத்திட்டம்,